DEPOSITON OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
Assistant Sessions Judge, Sankari
IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

| | |
|---|---|
| Calender | } |
| Miscellaneous | } |
| Preliminary Register | } |
| Sessions | } Case No.SC. 178/2022 |

| | |
|---|---|
| Deposition of Witness | { PW 4 |
| | { Prosecution |
| | { |
| Name | : தினேஷ் |
| Father's Name | : த/பெ. ரத்னவேல் |
| Taluk | : சங்ககிரி |
| Calling | : சொந்த தொழில் |
| Religion | :இந்து |
| Age | :30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.08.2023.

2023ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.4ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

1 முதல் 3- ஆம் எதிர்கள் ஆஜர்

**<u>முதல் விசாரணை</u>**

நான் சங்ககிரி கிராமம், மேஸ்திரி காட்டில் வசிக்கிறேன். நான் சொந்த தொழில் செய்கிறேன். அ.சா.1 என் அப்பா. அ.சா. 2, 3 எனக்கு உறவினர்கள். அவர்கள் என் வீட்டு அருகில் குடியிருக்கிறார்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 06.07.2020- ஆம் தேதியன்று நான் திருச்செங்கோடு சென்றுவிட்டு காலை சுமார் 11 மணிக்கு வீட்டிற்கு திரும்பி கொண்டிருந்தேன். அப்போது அ.சா.2 எனக்கு தொலைபேசியில் தொடர்புக்கொண்டு என் அப்பாவை ஆஜர் எதிரிகளை கத்தியால் குத்திவிட்டதாகவும் சீக்கிரம் வரவேண்டும் என்று சொன்னார்.

நான் வீட்டிற்கு வந்து பார்த்தபோது என்அப்பா என் வீட்டிற்கு முன்பு தரையில் உட்கார்ந்திருந்தார். அவருடைய சட்டை முழுவதும் இரத்தமாக இருந்தது. என் அப்பாவுடன் அ.சா. 2 மற்றும் அ.சா. 3 இருந்தார்கள். ஆஜர் எதிரிகள் ஏற்கனவே அங்கிருந்து சென்றுவிட்டார்கள். அப்போது என் அப்பா என்னிடம் 3- ஆம் எதிரி கத்தியால் குத்திவிட்டதாகவும், 1-ஆம் எதிரி முதுகில் அடித்ததாகவும், 2- ஆம் எதிரி நீ செத்தால் தான் பிரச்சனை முடியும் என்று சொன்னதாகவும், என்னிடம் சொன்னார். பின்பு தனக்கு வலி தாங்கமுடியவில்லை என்றும் மருத்துவமனைக்கு அழைத்து செல்லும்படி சொன்னார். அதனால் நானும், அ.சா.2 மற்றும் 3 ஆகியோரும் காரில் என் அப்பாவை சங்ககிரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றோம். அங்கு என் அப்பா சிகிச்சையிலிருந்தபோது சங்ககிரி போலீசார் வந்து அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டார்கள். பின்பு என் அப்பாவை ஈரோடு Emergency Care தனியார் மருத்துவமனையில் அழைத்துச்சென்று அங்கு 2 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். அந்த சமயம் கொரனோ நோய் அதிகமாக இருந்ததால் சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

ஒம்/- தினேஷ் ஒம்/-திரு. ந. பன்னீர்செல்வம்,

சார்பு நீதிபதி, சங்ககிரி